விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இனிய இதழ்

23 மார்ச் 2025 - 10-ம் இதழ்




உன்
கூந்தலேறிய
மல்லிகைச்சரம்
மோட்சமடைந்த
மகிழ்ச்சியில்
உதிர்ந்தது...

முத்து ஆனந்த்
வேலூர்.

அனைவருக்கும் வணக்கம்.
மாற்றம் ஒன்றே மாறாதது என்பது போல் நம் இதழ் பல் வேறு சமயங்களில் வடிவத்தில் தன்னை மாற்றிக் கொண்டு உங்களுக்கு விருந்து படைக்கவே விரும்புகிறது... எப்போதும் இட்லி சாப்பிட்டுக் கொண்டிருந்தால் போர் அடித்து விடும்... ஒரு ரவா தோசை, ஊத்தாப்பம், உப்புமா, பொங்கல் என்று சாப்பிட மனம் விரும்புவது போல் இன்று இதழையும் பல்வேறு விசயங்களில் மாற்றிக்கொண்டு வருகிறோம் இன்று இதழின் டிஜிட்டல் வடிவத்தை சற்று மேம்படுத்தி இருக்கிறோம். வழக்கம் போல் எங்களை பாராட்டுவீர்கள் என்று நினைக்கிறோம்... உங்கள் எதிர்பார்ப்புகளை மேலும் நிறைவேற்றுவோம் என்று உறுதிகூர்கிறோம். அனைவருக்கும் மனம் கனிந்த நன்றிகள்...

ர.ஸ்ரீஹரி
ஆசிரியர்

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி





இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

இன்று ஒ இதழ்
இன்று ஒ பதிப்பு
7094053241 Whatsapp
இன்று ஒ இதழ்
இன்று ஒ பதிப்பு
7094053241 Whatsapp
இன்று ஒ இதழ்

அழகிய ஆரம்பம்...

இன்று ஒ இதழ்

பக்கம் 3
23.03.25

Su	M	Tu	We	Th	Fr	Sa
30	31	March 2025				1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29



இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

இன்று இதழை உங்கள்
நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

டமால் டுமில் கதைகள்



முத்து ஆனந்த் வேலூர்

தோட்டா

தன் காதலன் "தோட்டாக்களை"ப் பற்றி எழுதிய "கவிதைகளை" மிகவும் ரசித்தாள் ரஞ்சனா!

கோபம்

மனைவி மீது இருந்த "கோபம்" தணிய கோபி வேக வேகமாக "வெட்டினான்" பிராய்லர் சிக்கனை!

பாடம்

துப்பாக்கி, கத்தி இதெல்லாம் "வன்முறை சாதனங்கள்" என்று "பிரம்பால் அடித்த படியே" சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் அறிவியல் ஆசிரியர்

அடி


தன் "கணவன்" கனவில் வந்து "கத்தி"யைக் காட்டி "மிரட்ட" இனி அவனை "அடிக்கக் கூடாது" என்று முடிவெடுத்தாள் சாந்தி!

கா த ல்

காதலிக்க ஆரம்பித்த பின் தன் "துப்பாக்கி கத்தியையெல்லாம்" ஆற்றில் வீசி எறிந்தான் "ரவுடி" பாலன்!

இனிய இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

General Knowledge



இளநீர்

- இப்போது கிடைக்கும் பொருட்களில் ஓரளவு கலப்படம் இல்லாதது.
- இதில் கிடைக்கும் தேங்காய் தாய்ப்பாலுக்கு ஒத்த சத்துக்கள் உள்ளன.
- தனியார் நிறுவனங்கள் இதனை உற்பத்தி செய்ய இயலாது.
- ஓரளவு ஏழைகள் வாங்கி உண்ணும் அளவில் விலை இருக்கிறது.
- எல்லா காலங்களிலும் கிடைக்கும்.
- பிரிட்ஜில் வைத்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை.
- உடலுக்கு தேவையான ஆற்றலைத் தரும்
- உடலில் உள்ள நீர் இழப்பை சமன் செய்யும்...

விளம்பர உலகில்...

- உங்கள் தாலுக்காவில் நீங்கள் ஒருவர் தான் விளம்பரதாரர்...

- உங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க...

- நல்ல விசயங்களை பகிர...

- உங்கள் ஆபர்களை உடனுக்குடன் தெரிவிக்க...

- தினசரி ஸ்டேட்டஸ்...
மினி வீடியோ விளம்பரங்கள்

- 24 மணி நேரமும் செயல்படும் உங்கள் விளம்பரம்...

- சூப்பர் மார்க்கெட், நகைக்கடை ஜவுளிக்கடை நடத்துபவர்கள் மட்டும் **7094053241** என்ற எண்ணுக்கு உங்கள் விபரத்தை வாட்சப்பில் அனுப்பவும்

- சேர்ந்து கலக்குவோம்...

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

மைக்ரோ கதை



சு.முன் சுதாகரன்
வானவன்மகாதேவி

உத்தியோகம்

"ஸ்டாப் ஸ்டாப்..." காரை நிறுத்த உத்தரவிட்டார் கலெக்டர் ராம் வரதன்.

இறங்கி குடுகுடுவெனச் சிறு பிள்ளை போல் ஓடினார். சாலையோரத்தில் ஓவியம் வரைந்து அமர்ந்திருந்தவரை வணங்கி...

"ஐயா இந்த மாதிரி சாலையோரத்தில் ஓவியம் வரையாமல் நான் சொல்ற மாதிரி பாதுகாப்பா செய்றீங்களா?"

"சொல்லுங்க தம்பி..." என்றார் ஓவியர்.

மரம் வளர்ப்பு, தண்ணீர் சிக்கனம், பிளாஸ்டிக் ஒழிப்பு, அரசுப் பள்ளியில் கல்வியென நல்ல நல்ல விழிப்புணர்வு ஓவியங்களா பொதுவெளி மதில் சுவர்களில் வரையனும் உழைப்புக்கேற்ற ஊதியமும் தருகிறோம்.

"ஒரு ரூபா...ரெண்டு ரூபா போடவே யோசிக்கிற இந்தக் காலத்துல எப்பேர்பட்ட உத்தியோகம்"
ரொம்ப நன்றி தம்பியெனக் காலில் விழ முயன்றவரைப் பிடித்துத் தூக்கிய ராம் வரதனுக்குக் கண்ணீர் ததும்பியது. தனது தந்தையும் சாலை ஓவியத்தால் தான் விபத்துக்குள்ளாகி இறந்ததை நினைத்து.

Vikas Basic Grammar Class



Master your Grammar and write with confidence

COURSE HIGHLIGHTS:
. Understanding Grammar rules
.Perfect your sentence structure
.Preparing for your exam

vikasclasses.2023@outlook.com
Call @9962201523

COURSE SESSION:
• Every Monday, Wednesday and Friday
• Timing:6.30 pm to 7.30 pm

மினி கதை



மலர்மதி

டாஸ்மாக்கடைகள் மூடப்பட வேண்டும் என்று நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கும் கலியபெருமாள்



பூக்களின் மகரந்தங்களில்
வீசுகிறது
உன் வாசம்

அருகே செல்லாதே
ஆபத்தானது
அந்த அன்பு

கர்வம் பிடித்து திரிகிறது
அந்த மழை
உன் மேல் பட்டதால்

லி .நௌஷாத் கான்
கும்பகோணம்

இனிய நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம் இன்று - ஈ
இதழை அனுப்பி இதழின்
வளர்ச்சிக்கு உதவுங்கள்

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

நகைச்சுவை செய்தி



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் ஐ.சி.யு வார்டில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட படுக்கையில் மட்டும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சரியாக 11மணிக்கு அந்த படுக்கையில் படுத்திருக்கும் நோயாளிகள் இறந்து போகிறார்கள்.

இது அந்த ஆஸ்பத்திரியில் இருக்கும் அனைவருக்கும் மிகுந்த அதிர்ச்சியையும், அச்சத்தையும் அளித்தது. பல நாடுகளிலிருந்து மிக சிறந்த மருத்துவர்களும் வந்து பார்த்துவிட்டு இறப்புகளுக்கு காரணம் தெரியாமல் குழம்பினர். மீண்டும் ஒரு ஞாயிற்று கிழமையில் என்ன தான் நடக்கிறது என்று பார்க்க மிக பெரிய மருத்துவ குழு ஒன்று 11மணிக்கு முன்னால் அந்த குறிப்பிட்ட படுக்கையை சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். என்ன ஆக போகிறதோ என்று அன்னைவரும் எதிர்பார்த்து கொண்டிருக்க.....

திடிரென உள்ளே நுழைந்தாள் ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் பகுதி நேரமாக கூட்டி, பெருக்கும் வேலை செய்யும் முனியம்மா.. வந்தவுடனையே நோயாளியின் ஆக்சிஜன் சப்ளை இயந்திரத்தின் PLUGi பிடுங்கிவிட்டு தனது செல் போனை சார்ஜில் போட்டுவிட்டு கடமையே கண்ணாக அந்த அறையை பெருக்க ஆரம்பித்தாள்...



இன்று ஓ இதழ் இன்று ஓ பதிப்பு 7094053241 Whatsapp

படித்ததில் பிடித்தது

கவிஞர்.இல.இரவி
செ.புதூர்.612203



கல்லூரியில் படிக்கும் ஒரு பையன் தன்னுடன் படிக்கும் பெண்ணிடம் ஒரு காதல் கடிதம் வைக்கப்பட்ட புத்தகத்தை கொடுத்தான்.

அதில் அவன்...
”நீ என்னை காதலிப்பதாக இருந்தால் நாளை நீ கல்லூரி வரும்போது சிவப்பு நிற ஆடை அணிந்து வரவேண்டும்” என்று எழுதியிருந்தான்.

மறுநாள் அவள் மஞ்சள் நிற ஆடையணிந்து கல்லூரிக்கு வந்து அவன் கொடுத்த புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டு சென்றாள்

இதைப் பார்த்தவுடன் மிகவும் அவமானமடைந்த அவன் அதன் பின் அவளை பார்ப்பதை, நினைப்பதைக் கூட மறந்து போனான்.

வருடங்கள் உருண்டோடின.
அந்தப் பெண்ணிற்கும் திருமணம் ஆனது.

ஒரு நாள் அலமாரியை சுத்தம் செய்யும்போது அந்தப் பெண் திருப்பிக் கொடுத்த அந்த புத்தகம் கீழே விழ அதில் இருந்து ஒரு துண்டுச் சீட்டு.

அதில் இருந்த செய்தி

நானும் உங்களை காதலிக்கிறேன் ?....
ஆனால் என்னிடம் சிவப்பு நிற ஆடை இல்லை... Sorry!!

நீதி: மாணவர்கள் கொஞ்ச காலத்திற்கு ஒருமுறையாவது புத்தகங்களை திறந்து பார்க்க வேண்டும்.

பின்குறிப்பு:


உடனே உங்களுடைய பழைய புத்தகங்கள் அனைத்தையும் கலைத்து தேடாதீர்கள்.

உங்கள் காலம் முடிந்தது.

நீங்கள் இப்போது தாத்தா ஆகிவிட்டீர்கள்

இன்று ஓ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

கவிதை



இன்று ஈ இதழ் ஈ பதிப்பு 7094053241 Whatsapp

சு.அருண் பிரகாஷ்

இராமச்சந்திராபுரம்



உனக்காகவே

மனமிரங்க மறுக்கும் பெண்ணே...
உன்னால் இறங்கிக்கொண்டு வருவது
என் மதிப்பெண்ணே...

நீ ஒரு கண்ணை
என்மீது வைத்திருந்தாலும்
மறுகண்ணை
புத்தகத்தில் வைத்திருக்கிறாய்...

நான் இரு கண்ணையும்
உன்மீதே வைத்திருக்கிறன்
என் இருதயத்தையும்
உனக்காகவே வைத்திருக்கிறேன்...

விழியால் மட்டும் கடிதம் போடும்
விவரமானவள் நீ...
மொழியாலும் கடிதம் போட்டு
விவகாரமாக்கி விடுபவன் நான்...

நீ வருகையிலும் போகையிலும்
உனைப் பார்க்கவே
வழிமீது சில பேர் காத்திருக்கிறார்கள்...

நீ வருமுன்பும் போனபின்பும்
நான் மட்டுமே
விழியோடு உனை வைத்துப்
பார்த்திருக்கிறேன்...

இன்று ஈ இதழ் ஈ பதிப்பு 7094053241 Whatsapp


நெருப்புக்கோழிகள் அதிவேகமாக
ஓடத்தொடங்கினால் குதிரைகளும் பின்
தங்கிவிடும்.

வீட்டு ஈக்களின் ஆயுள் காலம் 14 நாட்கள்.

புலிகளின் உடலிலுள்ள வரிக்கோடுகள்
ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.

வேலூர் முத்து ஆனந்த்

கவிதை



குடந்தை பரிபூரணன்

கண் கூசும் பார்வை

தூங்கா இரவெல்லாம்
தூண்டில் புழுவானேன்
தாங்கா துயரத்தில் தவித்தேனே...

மாங்காய் கடித்தாற்போல் கூசும்
கண்பார்வை வீசும்
நடிப்பெல்லாம் வேண்டாம் நமக்குள்...



தாய்மை:

- சென்னா, அரூர்

வேலைக்கு சென்ற இடத்தில்
வீட்டு முதலாளி கொடுத்த பலகாரத்தை
தான் கொண்டு சென்ற தூக்குவாளியில்
பதுக்குகிறாள் தாய்..

வீட்டுக்கு சென்று
குழந்தைகளிடம் கொடுத்து அவர்கள் உண்பதை
பார்க்கையில்
தன் பசி அனைத்தும் அடங்கி போகிறது தாய்க்கு.

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

மனசே ஒரு நிமிசம்...

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
என்று நம் முன்னோர்கள்
சொல்லிச் சென்றுள்ளார்கள்.

எவ்வளவு பெரிய வார்த்தை... பிரச்சனைகளை அடியோடு நீக்கும் வார்த்தை... வேண்டும் என்று முயற்சி எடுப்பது ஒரு புறம் இருக்கவேண்டும் என்றாலும் போதும் என்ற மனசும் இருக்க வேண்டும்.

எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். அது போதுமென்று மனம் சொன்னாலும் உழைப்பை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அந்த உழைப்புக்கு ஈடாக பணம் கிடைத்தால் பெற்றுக்கொண்டும், இல்லாவிட்டால் அதை அனுபவமாகவும் நினைக்கும் மனம் வேண்டும்.

அனைத்தையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. சில விசயங்கள் "நமக்கு இவ்வளவு தான்" என்று எளிமையாக எடுத்துக்கொண்டு கடந்துவிட வேண்டும்.

உலகம் பெரிது... காலமும் பெரிது... போதுமென்ற மனதைப் பெற்று, பொன் செய்யும் மருந்தாய் வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

உங்ககிட்ட என்ன திறமை எல்லாம் இருக்கு ?

அதெல்லாம் என் மனசுக்குள் ஒழிஞ்சு இருப்பதால் என்னால் சொல்ல முடியவில்லை...



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...

இன்று ஈ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

டிஜிட்டல் ஆத்திச்சூடி

கே.அசோகன்,
சென்னை 53



அன்றாடம் போஸ்ட் போடு
ஆரவார கூச்சல் இடு
இன்ஸ்டா ரீல்ஸை ஓட்டு
ஈயென்று பல்லைக் காட்டு
உள்ளத்தை திறந்து காட்டு
ஊர் பேச்சு கேளேல்
எவனையும் எதிர் கொள்
ஏற்றம் பெற போராடு
ஐயத்தை ஐஸ் கிரிமாக்கு
ஒரே போஸ்டுல ஹீரோ ஆகு
ஓராயிரம் லைக்ஸ் அள்ளும்
ஔவை ஆத்திச்சூடி இதில்லை
அ/தே இன்றைய டிஜிட்டல் உலகம்



கூண்டுக்கிளி

கே.அசோகன், சென்னை 53



எனக்கும் உடன்பாடில்லைதான்
அவனுக்கு சீட்டெடுக்க
உழைக்காமாலேயே"
உயர்வது எப்படியென்று
என்னிடம் கைக்கட்டி நிற்கிறான்.
நானும் சீட்டெடுத்து கொடுக்கிறேன்'..
அவன் பறக்கிறான் வானத்திற்கு
அப்பொழுதே செல்வந்தனாகி விட்டது போல
அவன் நம்பிக்கையை
வீணாக்காமல் கூண்டுக்குள் நுழைகிறேன்
என் உழைப்பிற்கான ஓர் நெல் மணி யோடு

மின்னல் கதைகள்

நீங்க எப்ப தம்பி?...

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

தயங்கி..தயங்கி..சாப்பிட்டு கொண்டிறுந்த அவனிடம் அருகில் சாப்பிட்டு கொண்டிருந்தவர்.."தம்பி நீங்க எப்ப கல்யாண சாப்பாடு" போடபோறிங்க? என்று கேட்டார்.

மருமகள்

மகன், மருமகளுக்கு தாலி கட்டும் போது அவள் வேண்டிக்கொண்டாள். நான் மாமியாரை வீட்டை விட்டு அனுப்பியது போல், "நீயும் என்னை அனுப்பாதே".. என்று.

காபி போட்டு

இன்றைக்கு எனக்கு முதல் இரவு. எனக்கு பால் சுத்தமாக பிடிக்காது. உங்கள் மகளிடம் முதல் இரவுக்கு காபி போட்டு தந்து அனுப்புங்க... என்று அத்தையுடம் கிண்டலாக கூறினான் பரத்.

படிக்க

சந்தாவுக்கு ஒன்று.... படைப்புக்கு ஒன்று... என இரண்டு இதழ் வந்ததில், ஒன்றை அருகில் இருந்த கிளை நூலகத்துக்கு தந்து உதவினார் குமார்.

சிலேட்டு

நன்கு எழுத படிக்க தெரிந்த மகனுக்கு அதிக சிலேட்டுகளை வாங்கி தந்தார்.. அவர் புதிதாக தொடங்கிய காய்கறி கடைக்கு காய்கறி விலையை எழுதி வைக்க.

கோழி

வீட்டு வாசலில் கரைந்து கொண்டிருந்த காகத்தை ஓட.. ஓட விரட்டி அனுப்பியது கோழி. எங்கே விருந்தினர் வந்தால் நம்மை பலிகடா ஆக்கி விடுவார்களோ என்ற பயத்தில்.

LIC முகவர்கள் தேவை

- நீங்கள் LIC முகவரா?
- தாலுக்காவிற்கு ஒருவருக்கு மட்டுமே வாய்ப்பு...
- பகுதி நேரமாக வேறு வேலை வேண்டுமா?
- ஊரில் அதிகம் நண்பர்களை கொண்டுள்ளீர்களா?
- உங்கள் விபரங்களை 7094053241 என்ற எண்ணுக்கு உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்..



இன்று ஈ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

கதம்பக் கவிதைகள்

உன் கண்கள்
அழகு என்றேன்
உன் இதழ்கள்
கோபித்துக் கொண்டு
முத்தம் தராமல்
விலகிப் போகிறது

முத்து ஆனந்த் வேலூர்

இடிகூட உந்தன்
பெயர் சொல்லி முழங்கினால்
என் தலைமீது விழுந்திடச்
சம்மதம்தானடி
சு. அருண் பிரகாஷ் இராமச்சந்திரபுரம்

மன்னிப்பதற்கு
பெரிதாய்
ஒன்றும்
தேவையில்லை...
எப்படியோ போ
மட்டும் போதும்...
அரியலூர் நம்.திரு.ர அம்ஏச்

அலட்சியமாய் அமர்ந்தது
மின்சாரக் கம்பியில்
சிட்டுக்குருவி
வானவன்மகாதேவி.-சு.மூன்சுதாகரன்,

செடியில் இருந்து
ரோஜாவை பறிக்கையில்
முள் குத்துகிறது..
உன் காதலுக்கு முன்னால்
இந்த வலி ஒன்றும் பெரியது இல்லையடி..

- சென்னா, அரூர்



கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி

செல் 7094053241 indhrumail@gmail.com

இன்றுவை படித்தற்கு நன்றி...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp